## 6.15 உள்ளாட்சி அமைப்புகள் சிலை, நினைவுத்தூண், நினைவு மண்டபம், நினைவு வளைவு போன்றவை நிறுவுதல் குறித்து சில ஆணைகள் வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை

அரசாணை(நிலை) எண்.221 நாள் : 20.12.1998

படிக்க :

1. அரசாணை(நிலை) எண்.1711, ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் 26.10.79.
2. அரசாணை (நிலை) எண்.193, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.8.98.
3. அரசாணை (நிலை) எண்.186, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.9.98.

**ஆணை**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஆளுமைக்கு உட்பட்ட பகுதிகளில் சிலை நிறுவப்படும் பொழுது, உள்ளாட்சி அமைப்புகளுக்கு சிலை வைப்பவர்கள் பராமரிப்பதற்கான செலவினத் தொகைச் செலுத்துவது குறித்து முதலில் படிக்கப்பட்ட ஆணையில் அறிவுரை வழங்கப்பட்டது. இரண்டாவது படிக்கப்பட்ட ஆணையில், சிலைகள் வெண்கலத்தால் செய்யப்பட வேண்டிய அவசியம் குறித்து ஆணை வெளியிடப்பட்டது. மூன்றாவது படிக்கப்பட்ட ஆணையில் சிலை நிறுவுவதை முழுமையாக தடை செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2) 22.12.1998 மற்றும் 26.10.98 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிகள் கூட்டத்தில் சிலை வைப்பது தொடர்பாக கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது:–

1) இனிமேல் புதியதாக சிலை வைப்பதாக இருந்தால், அது அரசின் முன் அனுமதி பெற்ற பின்னரே வைக்கப்பட வேண்டும்.

2) சிலைகளை வைப்பவர்களே பாதுபாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3) ஏற்கெனவே, வைக்கப்பட்டுள்ள சிலைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பும், பாதுகாக்கின்ற பொறுப்பும் அந்தச்சிலைகளை வைத்த சங்கம் அல்லது பிரிவு அல்லது தனிப்பட்டவரையே சாரும்.

3) அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இப்பொருள் குறித்து மேலும் பரிசீலிக்கப்பட்டது. அதன் முடிவாக, இதுவரை சிலை நிறுவுவது குறித்து வெளியிடப்பட்ட ஆணைகள் அனைத்தையும் மாற்றி, கீழ்க்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமெனறு அரசு இவ்வாணை வெளியிடுகிறது.

1) சிலை நினைவுத்தூண், நினைவு மண்டபம், நினைவு வளைவு போன்றவை ஏதுவாயிலும், அதனை அமைப்பதற்கு அரசின் ஒப்புதல் பெற்றாக வேண்டும்.

2) ஏற்கெனவே, நிறுவப்பட்டுள்ள சிலை நினைவுத்தூண், நினைவு மண்டபம், நினைவு வளைவு போன்றவை பாதுகாக்கப்பட வேண்டும். அதனை நிறுவியவர்களே (அவற்றை அமைத்த சங்கம், பிரிவு, தனிப்பட்டவர் போன்றவர்) அவர்களின் பாதுபாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3) ஏற்கெனவே, நிறுவப்பட்டசிலைகள் சீர்குலையாமலிருக்க, அச்சிலைகளை பாதுபாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று திரும்பவும் நிறுவுவது தேவையெனக் கருதப்பட்டால், இது குறித்து அரசிடம் ஆணை பெற்றவின் சம்பந்தப்பட்ட தனிநபர், அமைப்பு போன்றவற்றால் மாற்றி அமைக்கப்படலாம்.

4. மேற்கண்ட அரசின் ஆணைகளை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தெரியப்படுத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.மாலதி**
அரசு செயலாளர்